## செப்டம்பர் - 27- புதன்
### புனித வின்சன்ட் டீ பவுல்

**முதல் வாசகம் : எஸ்ரா9 : 5 – 9**

மாலைப்பலி நேரத்தில் நோன்பை முடித்துக் கிழிந்த ஆடையோடும் மேலுடையோடும் முழந்தாளிட்டு என் கடவுளாகிய ஆண்டவரை நோக்கி கைகளை விரித்து நான் கூறியது. ”கடவுளே உம்மை நோக்கி என் முகத்தைத் திருப்ப வெட்கி நாணுகிறேன். ஏனெனில், எங்கள் பாவங்கள் எங்கள் தலைக்கு மேல் பெருகிவிட்டன. எங்கள் குற்றங்கள் விண்ணைத் தொட்டு விட்டன. எம் முன்னோர் காலமுதல் இதுவரை நாங்கள் பெரும் பாவம் செய்துள்ளோம். எங்கள் பாவங்களினால், நாங்களும் எங்கள் அரசர்களும், குருக்களும் வேற்று நாட்டு மன்னர்களின் கைக்கும், வாளுக்கும் அடிமைத்தனத்திற்கும் கொள்ளைக்கும் வெட்கக் கேட்டுக்கும் இதுவரை ஒப்பவிக்கப்பட்டோம்.ஆனால், தற்பொழுது சிறிது காலமாய் எம் கடவுளும் ஆண்டவருமாகிய உமது கருணை துலங்கியுள்ளது எங்களுள் சிலரை எஞ்சியோராக விட்டுவைத்தீர் உமது புனித இடத்தில் எங்களுக்குச் சிறிது இடம் தந்தீர் எம் கடவுளாகிய நீர் என் கண்களுக்கு ஒளி தந்தீர் எமது அடிமைத் தனத்திலிருந்து சற்று விடுதலை அளித்தீர்.நாங்கள் அடிமைகளாக இருந்தும், எம் கடவுளாகிய நீர் எங்களை அடிமைத்தனத்திற்குக் கையளிக்கவில்லை. மாறாக நாங்கள் உயிர் பிழைக்கவும், எங்கள் கடவுளின் கோவிலை எழுப்பவும், பாழடைந்ததைப் பழுதுபார்க்கவும் யூதேயாவிலும் எருசலேமிலும் பாதுகாப்பு அளிக்கவும் பாரசீக மன்னர்களின் முன் எமக்கு உமது தயை கிடைக்கவும் செய்தருளீர்!

**பதில்பாடல் :** என்றும் வாழும் கடவுள் போற்றி

**நற்செய்தி : லூக்கா 9: 1 – 6**

அக்காலத்தில் இயேசு பன்னிருவரையும் ஒன்றாக வரவழைத்து, பேய்களையெல்லாம் அடக்கவும் பிணிகளைப் போக்கவும் வல்லமையும் அதிகாரமும் அவர்களுக்குக் கொடுத்தார். இறையாட்சிபற்றிப் பறைசாற்றவும் உடல் நலம் குன்றியோரின் பிணிதீர்க்கவும் அவர்களை அனுப்பினார்.அப்போது அவர்களை நோக்கி, ”பயணத்திற்குக் கைத்தடி, பை, உணவு, பணம் போன்ற எதையும் எடுத்துக்கொண்டு போகவேண்டாம். ஓர் அங்கி போதும்.நீங்கள் எந்த வீட்டிக்குள் சென்றாலும் அங்கேயே தங்கியிருங்கள் அங்கிருந்தே புறப்படுங்கள்.உங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” என்றார்.அவர்கள் ஊர் ஊராகச் சென்று எங்கும் நற்செய்தியை அறிவித்து நோயாளிகளைக் குணமாக்கினார்கள்.

**தியானம் :** தமது பன்னிரு சீடர்களுக்கு வல்லமையும், அதிகாரமும் கொடுத்து இறையாட்சியைப் பறைசாற்ற அனுப்பும் நற்பணியாளன் இயேசுவை இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். கடந்த காலங்களில் சுற்றித்திரிந்து போதித்தன் பயனாகத் தமக்குக் கிடைத்த பட்டறிவால் ஒரு புதுவிதமான கட்டளையையும் சீடர்களுக்கு அக்கறையோடு ஆண்டவர் இயேசு முன்னெச்சரிக்கையாகக் கூறி அனுப்புவதனையும் இன்றைய நற்செய்தியில் அவதானிக்கத் தவறக்கூடாது. “உங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” (லூக்கா9:4). ஆண்டவர் இயேசுவுக்கு இவ்வாறு கோபம் ஏற்படலாமா? என அர்த்தம் கொள்ளலாம். ஆயினும், ஆண்டவர் இயேசு கோபமடையவில்லை. மாறாக, கசப்பான அனுபவத்தைகால் தூசிபோல உதறித்தள்ளிவிட்டு வழங்கப்பட்ட பணியைத் தொடருங்கள் என்றே தமது சீடர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கின்றார் என்பதே இன்றை நற்செய்தியின் மறை உண்மை எனவும் பொருள்கொள்ள இடமுண்டு. இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது 18-06-2013 திகதிய செய்தியில் .......“பகைவரையும் அன்புகூர இயேசு விடுக்கும் அழைப்பு உலகினின்று விலகி அடைபட்ட துறவு மடத்தில் வாழ்வோருக்கும் புனிதர்களுக்கும் மட்டுமே உரியது என நாம் ஒதுக்கி வைக்கத் தேவையில்லை. ஏனெனில் நம்மால் இதனை ஆற்றமுடியும் என இயேசு கூறுகின்றார். உங்களைத் துன்புறுத்துவோருக்காகவும் செபியுங்கள் என இயேசு விடுக்கும் விண்ணப்பத்திற்கு நாம் சரி என உரைத்தால்.... நம்மைத் துன்புறுத்துவோரின் மனமாற்றத்திற்காக செபிக்கவேண்டிய கடமையும் நமக்கு உள்ளது.... இயேசுவின் விண்ணப்பத்தை நாம் மறுத்தால் அடுத்தவரின் பகைவராக தொடர்ந்து பழிவாங்குதலிலேயே வாழ்ந்து கொண்டிருப்போம்” என்கின்றார். பணிவாழ்வில் தடைகளை, உபத்திரவங்களை சவால்களாக ஏற்றுக்கொள்ள அதே ஆண்டவர் இயேசுவிடம் வரம்கேட்போம். தடைகளும், தொல்லைகளும் எமது நற்செயல்களுக்காக வழங்கப்படும் சேவை நலம்பாராட்டும் சான்றிதழ்கள் என நல்மனதோடு ஏற்றுக்கொள்வோம்.